# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

*சாரதி பயிற்றுவிப்பாளரை பதிவு செய்து கொள்வதற்கான எழுத்து மூலமான பரீட்சை – 2021 (2022)*

*மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி பயிற்றுவிப்பாளரைப் பதிவுசெய்து கொள்வதற்கான எழுத்து மூலமானப் பரீட்சையை எழுதுவதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2022.03.15 ஆந் திகதி தொடக்கம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இந்தப் பரீட்சையானது 2022, யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.*

*01.* **விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் :**

(i) *இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.*

(ii) *வயதெல்லையானது 23 ஐ விட அதிகமாகவும் 65 வயதினை விட குறைவாகவும் இருத்தல் வேண்டும். (அதன்படி 1957.03.16 ஆந் தினத்தன்று அல்லது அதற்கு பின்போ மற்றும் 1990.03.15 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்போ பிறந்த நாளைக் கொண்டவர்கள் மாத்திரமே இந்த பரீட்சைக்காக விண்ணப்பிக்கக்கூடிய தகுதி கொண்டவர்களாவர்.)*

(iii) *கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் கணிதத்துடன் சிங்களம் அல்லது தமிழ் மொழி பாடங்கள் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்து இருப்பதுடன் சிறப்பு சித்திகள் 2 பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் குறித்த சித்தி நிலையானது இரண்டுக்கு குறையாத அமர்வுகளில் பரீட்சைக்கு தோற்றியதன் மூலம் எய்தப் பெற்றிருக்க வேண்டும். அல்லது குறித்த தகுதிக்கு சமமான தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சி ஆணைக்குழுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய தொழில் பயிற்சி தகுதி மட்டம்* III (NVQ - Level - *3*) *சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அல்லது விண்ணப்பிக்கும் திகதிக்கு முன்பு ஐந்து வருடங்கள் உதவிச் சாரதி பயிற்றுவிப்பாளராக வேலை செய்த அனுபவம் கொண்டவராதல் வேண்டும்.*

(iv)*(அ) பயிற்றுவிப்பாளராக தான் விண்ணப்பிக்கும் குறித்த வகுப்பிற்கு பொருத்தமான வாகனம் தொடர்பான குறித்த வகுப்பிற்காக கற்பிக்க தகுதி பெறும் வகையில் பின்வரும் வாகன வகுப்புகளுக்கான செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தை விண்ணப்பிக்கும் தினத்திற்கு 5 வருடங்களுக்கு முன்பு அவர் பெற்றிருக்க வேண்டும்.*

"A" *வகுப்பு சாரதி பயிற்றுநர் :* "DE" *அல்லது* "CE" *மற்றும்* "A" *வகுப்பிற்கு பொருத்தமான தினத்திற்குரிய சாரதி அனுமதிப்பத்திரம்.*

"B" *வகுப்பு சாரதி பயிற்றுநர் :* "D" *அல்லது* "C" *மற்றும்* "A" *வகுப்பிற்கு பொருத்தமான தினத்திற்குரிய சாரதி அனுமதிப்பத்திரம்.*

"C" *வகுப்பு சாரதி பயிற்றுநர் :* "B" *அல்லது* "B 1" *மற்றும்* "A" *வகுப்பிற்கு பொருத்தமான தினத்திற்குரிய சாரதி அனுமதிப்பத்திரம்.*

*அதன்படி, விண்ணப்பிக்கும் திகதிக்கு முன்பு குறைந்தது 5 வருடங்களுக்கு முன்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் குறித்த விண்ணப்பதாரியின் தகுதிகளைக் கூறும்* "B", *அல்லது* "B 1" *என வகைப்படுத்தப்பட்ட சாரதி அனுமதிப்பத்திர வகுப்பின் ஒரு சாரதி அனுமதிப்பத்திர வகுப்பு அல்லது சாரதி அனுமதிப்பத்திர வகுப்புகள் பலவற்றை பயிற்றுவிப்பாளர்கள் பயிற்றுவிக்கலாம் என அதிகாரம் வழங்கப்படுவதுடன்* "C" *வகுப்பு சாரதி பயிற்றுவிப்பாளராகவும் அவர் நியமிக்கப்படுவார்.*

*(ஆ) சாரதி பயிற்றுவிப்பாளராக நியமனம் பெறும் தினத்தில் 5 வருடங்கள் அனுபவம் மற்றும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான வகுப்புகளுக்கான செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் குறித்த தினத்தில் காணப்பட வேண்டும்.*

(v) தங்களுக்குரிய வாகன வகுப்புகளில் வாகனத்தை செலுத்துதல் மற்றும் செலுத்துவதற்கு பயிற்றுவித்தல் போன்றவற்றிற்கு பொருத்தமான உடல் ஆரோக்கியம் உடையவர் என்பதை தேசிய வாகன போக்குவரத்து வைத்திய நிறுவனம் அல்லது ஆணையாளர் நாயகம் மூலமாக அதிகாரம் வழங்கப்பட்ட ஏதேனும் அரசாங்க அல்லது பகுதியளவான அரசாங்க நிறுவனங்களின் வைத்திய அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்ட வைத்திய சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

(vi) அரசாங்க மற்றும் பகுதியளவில் அரசாங்க மற்றும் வேறு ஏதாவது நிறுவனங்களில் பயிற்றுவிப்பாளராக பணி புரிந்தமை தவிர வேறு ஏதேனும் பணியில் ஈடுபட்டவராக குறித்த விண்ணப்பதாரி இருக்கக் கூடாது.

2. **பரீட்சை நடாத்தும் முறை** :

(i) இந்தப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.
(ii) அனைத்து கேள்விகளுக்கும் ஒரே மொழியில் மாத்திரமே பதிலளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் போது வேண்டப்பட்ட மொழியானது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

3. பரீட்சையுடன் சம்பந்தமான பாடங்கள் - இந்தப் பரீட்சை மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமை தொடர்பான இரு பகுதிகளைக் கொண்டதுடன் பரீட்சை வினாத்தாள்கள் இரண்டிலும் சித்தியடைய வேண்டும் :

(i) மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமைத்துவம் I - 02 மணித்தியாலங்கள்

(ii) மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமைத்துவம் II - 02 மணித்தியாலங்கள்

4. **பாடத்திற்கான பரிந்துரைகள்**.- இந்த வினாத்தாள் இரண்டிலும் மோட்டார் வாகனச் சட்டம், வீதி ஒழுங்குமுறைக் கோவை என்பவற்றை கற்பித்தல் மற்றும் பயிற்றுவித்தலுக்கான வழிமுறைகள், பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல், நெறிமுறைகள், முதலுதவிகள், தொழில் துறை மற்றும் தொழில்நுட்பம் பற்றிய அறிவு மற்றும் வீதிப் பாதுகாப்பு பற்றிய கேள்விகள் உள்ளடக்கப்படுகின்றன.

5. (I) **தெரிவுசெய்யும் முறை**.- ஒவ்வொரு வினாத்தாளிற்கும் குறைந்தது 40% வீதம் ஒட்டு மொத்த எழுத்து பரீட்சையிலும் 40% அல்லது அதனைவிட அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவதற்கான தகுதிகளை பெறுவர். நேர்முக பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் சாரதி பயிற்றுவிப்பாளர்களுக்காக நடாத்தப்படும் கற்கைகளில் பங்குபற்ற வேண்டும், அதனை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்பு சாரதி பயிற்றுவிப்பாளராக செயற்படுவதற்கான நடைமுறைப் பரீட்சைக்கு முகம் கொடுக்க வேண்டும். குறித்த நடைமுறைப் பரீட்சையில் 40% இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்ற பரீட்சை தோற்றுநர்களுக்கு பயிற்றுவிப்பாளர்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். உரிய பரீட்சைக்கான கட்டணத்தை விண்ணப்பதாரியே செலுத்த வேண்டும்.

(II) **பரீட்சையின் பெறுபேறுகள்**.- எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% இனை விட குறையாமல் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகள் உள்ளடங்கப்பட்ட ஆவணமானது மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திடம் கையளிக்கப்படும். பரீட்சைக்கு வருகைத் தந்த அனைத்து விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகளும் தபால் மூலமாக அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் வலைத்தளமான www.results.exams.gov.lk என்ற வலைத்தள முகவரியின் ஊடாக தெரியப்படுத்தப்படும்.

6. **விண்ணப்பிப்பதற்கான முறை** :

(அ) விண்ணப்பப்படிவமானது இந்த விளம்பரத்தில் காட்டப்பட்ட மாதிரிப் படிவம் போல காணப்பட வேண்டும். குறித்த காகிதத்தை இரு பக்கமும் பயன்படுத்தவும். 8.27" × 11.69" (A4) என்ற அளவிலான காகிதத்தில் விண்ணப்பமானது தயார் செய்யப்பட்டு விண்ணப்பதாரியினால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தை தயார் செய்யும் போது தலைப்பாக பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட்ட வேண்டும். சிங்கள விண்ணப்பப் படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் பரீட்சையின் பெயர் தலைப்பாக குறிப்பிடப்பட வேண்டும். மேலும், மாதிரி விண்ணப்பப் படிவத்தினை போலவே 1 முதல் 07 வரை இலக்கமிடப்பட வேண்டும் என்பதுடன் முதலாவது பக்கத்தின் தொடர்ச்சி இரண்டாம் பக்கத்திற்கு செல்கிறது என்று முறையாகக் குறிப்பிட வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழியில் விண்ணப்பம் இருக்க வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவமானது 2022.03.15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கப் பெறும் வகையில் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்புக்கள் (நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சாரதி பயிற்றுநராக சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான எழுத்து மூலமான பரீட்சை (2022)" எனத் தெளிவாக எழுதியிருக்க வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் எந்த விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஈ) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200 ஆகும். குறித்த கட்டணமானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பான 20-03-02-13 என்பதன் கீழ் அரசாங்க வருமானத்திற்கு வரவு வைத்து நாடு பூராகவும் காணப்படும் ஏதேனும் தபால் நிலையத்தில் /மாவட்ட /பிரதேச செயலக அலுவலகத்தில் பணமாக செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் கிடைக்கப்பெறும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் ஒட்ட வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்காக செலுத்திய பணம் எந்த காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பதாரி தன்னிடம் வைத்துக்கொள்வதன் மூலம் அது பின்னர் பயன்படலாம்.

(உ) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபரால், சமாதான நீதவானால், சத்தியங்களுக்கான ஆணையாளரால், சட்டத்தரணியால், பிரசித்த நொத்தாரிசால், முப்படைகளில் அதிகாரம் கொண்ட அலுவலர், பொலிஸ் சேவையின் அரசாங்க வர்த்தமானியின் படி பதவி வழங்கப்பட்ட அலுவலர் அல்லது நிரந்தர அரசாங்க பதவி கொண்ட கிராம அலுவலர் அல்லது நிறைவேற்று அலுவலர் ஆகியோரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

(ஊ) எந்த வகையிலேனும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபால் செய்யப்பட்ட போது விண்ணப்பப்படிவம் காணாமல் போனாலோ, தாமதமானாலோ, அது தொடர்பான புகார்கள் கவனத்திலெடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பப் படிவம் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரமாட்டாது.

(எ) அனுமதிப் பத்திரம் வழங்கும் போது விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்பட்டதன் பின்னர் உடனடியாக அது தொடர்பில் தெரிவிக்கும் அறிவித்தல் பத்திரிகைகளிலும் திணைக்களத்தின் வலைத்தளத்திலும் பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். அறிவித்தலில் சொல்லப்பட்ட பரீட்சை நடைபெறும் தினத்திற்கு குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்பு அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் பரீட்சையை நடாத்தும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் அமைப்புக்கள் (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையில் அது தொடர்பில் விசாரிக்க வேண்டும். குறித்த விசாரணையின் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை பிழையில்லாது குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளிப் பிரதேசங்களில் வசிப்பவர் என்றால், குறித்த தகவலுடன் பெக்ஸ் மூலம் பரீட்சைக்கு அனுமதி அட்டையின் பிரதியை பெற்றுக்கொள்வதற்கு இலகுவாக பெக்ஸ் இலக்கம் ஒன்று குறிப்பிடப்பட்டு வேண்டுகோள் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைக்க வேண்டும். பெக்ஸ் இலக்கம் ஒன்றை அவ்வாறு குறிப்பிடுவதானது மிகவும் பயனுள்ளதாக அமையும். குறித்த விசாரணையின்போது பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கப்படும் எந்தவொரு தகவல் குறித்தும் சான்றுப்படுத்தக்கூடிய வகையில் விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தமைக்கான தபால் பற்றுச்சீட்டு என்பவற்றை தன்னுடன் வைத்திருப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

(அ) பரீட்சையின் பெயர் :----.

(ஆ) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.

(இ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

(ஈ) முகவரி :----.

(உ) பெக்ஸ் இலக்கம் :----.

(ஊ) விண்ணப்பத்தைத் தபால் செய்த திகதி, பதிவு தபால் இலக்கம் மற்றும் அனுப்பி வைத்த தபால் அலுவலகம் :----.

(எ) கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :----.

(ஏ) பரீட்சைக்கு தோற்றியிருக்கும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையினைப் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பதிகாரியிடம் முன் வைக்க வேண்டும். பரீட்சை அனுமதி பத்திரத்தை முன்வைப்பதற்கு இயலாமல் போகும் விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேலும், பரீட்சைகள் நடாத்துவதற்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் கொண்டு நடாத்தப்படும் விதிமுறைகளுக்குப் பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டவர்களாவர். குறித்த விதிமுறைகளை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டி நேரிடும்.

(ஒ) பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதானது அவர் குறித்த பதவி நிலைக்கு தகுதி பெற்று விட்டார் என்று கருதப்படக்கூடாது.

7. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு விடயம் சம்பந்தமாக பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்துவதற்காக கீழ்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வழங்கப்படும் இந்த அறிவித்தல்களுக்கு இடையில் மொழிகளில் ஏதேனும் பொருத்தப்பாடுகள் இல்லாமல் இருந்தால் அல்லது முரண்பாடுகள் காணப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் படியே செயற்பட வேண்டும்.

09. இந்தப் பரீட்சை தொடர்பான அறிவித்தலின் ஏற்பாடுகளை கவனத்திலெடுக்காத விண்ணப்பங்கள் தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானதாகும்.

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம்.

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம்,
இல. 341, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5.
2022.01.12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்**

Department of Motor Traffic

சாரதி பயிற்றுநர்களைப் பதிவு செய்வதற்கான எழுத்து மூலமான பரீட்சை - 2022

Written Examination for Registration of Driving Instructors - 2022

* பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
(பொருத்தமான இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்)
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4

1. (அ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ஆ) கடைசிப் பெயரை முதலில் எழுதி முதலெழுத்துக்களை பின்னால் எழுதவும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துகளில்) :----.
(உதாரணமாக : GUNAWARDHANA, H. M. S. K.)

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.(அ) விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(ஆ) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

(இ) சாரதிப் பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

4. பால் :
ஆண் - 0
பெண் - 1 (பொருத்தமான இலக்கத்தை பெட்டியினுள் இடவும்)

5. தொலைபேசி இலக்கம் :-
கையடக்கத் தொலைபேசி : | | | | | | | | | | |

நிரந்தர தொலைபேசி : | | | | | | | | | | |

6. விண்ணப்பதாரியின் வயது மற்றும் பிறந்த திகதி :
(அ) வயது : | | |   பிறந்த ஆண்டு : | | | | |   மாதம் : | | |   திகதி : | | |

7. கல்வித் தகைமை :-----.

8. அனுபவம் :-----.
(சான்றுப்படுத்தப்பட்ட ஆவணங்களை இணைக்கவும்)

9.(அ) பரீட்சைக் கட்டணமான ரூபா 1,200.00 பணத்தினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும். பற்றுச்சீட்டின் பிரதியினை நீங்கள் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

(அ) தான் அரச, பகுதியளவில் அரசாங்க மற்றும் அது போல வேறு ஏதேனும் நிறுவனங்களில் சாரதி பயிற்சி சேவையில் ஈடுபட்டமை தவிர அவ்வாறான நிறுவனங்களில் ஊழியராக சேவை புரியவில்லை என்பதை சத்தியக்கடதாசியின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். (ஓய்வு பெறுவதற்கு 6 மாத காலங்கள் மீதமிருக்கும் நபர்களும் விண்ணப்பிக்க முடியும். அவர்களின் பயிற்றுவிப்பவர்களுக்கான அனுமதிப் பத்திரம் ஓய்வுபெற்ற பின்னரே வழங்கப்படும்.)

மேலே சொல்லப்பட்ட என்னுடைய தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கு உட்பட்டு பிழையில்லாத விதத்தில் நான் வெளிப்படுத்துகிறேன். மேலும், பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினூடாக செயற்படுத்தப்படும் விதிமுறைகளுக்கு நான் கட்டுப்பட்டு நடப்பேன் எனவும் தெரிவிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

திரு./திருமதி/செல்வி ..................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிந்து வைத்திருக்கின்றேன் என்பதுடன் ... ......................................... ஆந் தினத்தன்று எனது முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்றும், நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டினை ஒட்டியிருக்கிறார் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்தியவரின் கையொப்பம்.
(இறப்பர் முத்திரையை இடவும்)

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

01-254

---

## மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

*உதவி சாரதி பயிற்றுவிப்பாளரை பதிவுசெய்து கொள்வதற்கான எழுத்து மூலமான பரீட்சை – 2022*

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் உதவி சாரதி பயிற்றுவிப்பாளரைப் பதிவுசெய்து கொள்வதற்கான எழுத்து மூலமான பரீட்சையை எழுதுவதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2022.03.15 ஆந் திகதி தொடக்கம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இந்தப்பரீட்சையானது 2022, யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

01. **விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ii) வயதெல்லையானது 23 ஐ விட அதிகமாகவும் 65 வயதினை விட குறைவாகவும் இருக்க வேண்டும். (அதன்படி 1957.03.16 ஆந் தினத்தன்று அல்லது அதற்கு பின்போ மற்றும் 1990.03.15 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்போ பிறந்த நாளைக் கொண்டவர்கள் மாத்திரமே இந்த பரீட்சைக்காக விண்ணப்பிக்க கூடிய தகுதிகளை கொண்டவர்களாவர்.)

(iii) எட்டாவது வகுப்பிற்கான தகுதிகாண் பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்து இருக்க வேண்டும்.

(iv) சாரதி பயிலுனர் பாடசாலையில் 03 வருடங்கள் வேலை செய்தமைக்கான அனுபவம் இருக்க வேண்டும். ஊழியர் சேமலாப நிதி இலக்கம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பான ஆவணங்கள் சான்றுகளாக முன்வைக்கப்பட வேண்டும். அதனுடன், 2016.11.02 ஆந் திகதிக்கான ஊழியர் சேமலாப நிதி இலக்கம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி இலக்கம் (ETF) தொடர்பான ஆவணங்கள் முன்வைக்க வேண்டிய தேவை இல்லையென்றால் விண்ணப்பதாரி சாரதிப் பயிலுநர் பாடசாலையில் பணி புரிந்தமையை ஏற்றுக்கொண்டு தொழில்தருநரால் வழங்கப்படும் ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(v) உதவி சாரதி பயிற்றுவிப்பாளர் அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் திகதிக்கு முன்பிலிருந்து ஐந்து வருடங்களுக்குள் பெற்றுக்கொண்ட "B", "B1" மற்றும் "A" என ஒவ்வொரு வாகன வகுப்பிற்கும் பொருத்தமான செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் கைவசம் இருக்க வேண்டும். அது போலவே, விண்ணப்பிக்கும் திகதிக்கு முன்பு குறைந்தது ஐந்து வருடங்களுக்கு முன்பு பெற்றுக்கொண்ட செல்லுபடியாகக் கூடிய சாரதி அனுமதிப்பத்திரத்துடன் குறித்த விண்ணப்பதாரியின் தகுதியை கூறும் "B", "B1" மற்றும் "A" என வகைப்படுத்தப்பட்ட சாரதி அனுமதிப்பத்திர வகுப்புகளில் ஒரு சாரதி அனுமதிப் பத்திர வகுப்பு அல்லது பல சாரதி அனுமதிப் பத்திர வகுப்புகளுக்கு உதவி சாரதிப் பயிற்றுவிப்பாளராக செயற்பட முடியும் என்ற அடிப்படையில் உதவி சாரதி பயிற்றுவிப்பாளராக அனுமதிப்பத்திரம் வழங்கி வைக்கப்படும்.

(vi) தங்களுக்குரிய வாகன வகுப்புகளில் வாகனத்தை செலுத்துதல் மற்றும் செலுத்துவதற்குப் பயிற்றுவித்தல் போன்றவற்றிற்கு பொருத்தமான உடல் ஆரோக்கியம் உடையவர் என்பதை தேசிய வாகன போக்குவரத்து வைத்திய நிறுவனம் அல்லது ஆணையாளர் நாயகம் மூலமாக அதிகாரம் வழங்கப்பட்ட ஏதேனும் அரசாங்க அல்லது பகுதியளவான அரசாங்க நிறுவனங்களின் வைத்திய அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்ட வைத்திய சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

(vii) அரசாங்க மற்றும் பகுதியளவில் அரசாங்க மற்றும் வேறு ஏதாவது நிறுவனங்களில் பயிற்றுவிப்பாளராக பணி புரிந்தமை தவிர வேறு ஏதேனும் பணியில் ஈடுபட்டவராக குறித்த விண்ணப்பதாரி இருக்கக் கூடாது.

*2.* **பரீட்சை நடாத்தும் முறை** :

(i) இந்தப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(ii) அனைத்து கேள்விகளுக்கும் ஒரே மொழியில் மாத்திரமே பதிலளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் போது வேண்டப்பட்ட மொழியானது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

3. பரீட்சையுடன் சம்பந்தமான பாடங்கள் - இந்தப்பரீட்சை மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமை தொடர்பான இரு பகுதிகளைக் கொண்டதுடன் பரீட்சை வினாத்தாள்கள் இரண்டிலும் சித்தியடைய வேண்டும் :

(i) மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமைத்துவம் I - 02 மணித்தியாலங்கள்

(ii) மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமைத்துவம் II - 02 மணித்தியாலங்கள்

4. பாடத்திற்கான பரிந்துரைகள்.- இந்த வினாத்தாள் இரண்டிலும் மோட்டார் வாகனச் சட்டம், வீதி ஒழுங்குமுறைக் கோவை என்பவற்றை கற்பித்தல் மற்றும் பயிற்றுவித்தலுக்கான வழிமுறைகள், பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல், நெறிமுறைகள், முதலுதவிகள், தொழில்த் துறை மற்றும் தொழில்நுட்பம் பற்றிய அறிவு மற்றும் வீதிப் பாதுகாப்பு பற்றிய கேள்விகள் உள்ளடக்கப்படுகின்றன.

5. (1) தெரிவுசெய்யும் முறை.- ஒவ்வொரு வினாத்தாளிற்கும் குறைந்தது 40 வீதம் ஒட்டு மொத்த எழுத்து பரீட்சையிலும் 40% அல்லது அதனைவிட அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவதற்கான தகுதிகளை பெறுவர். நேர்முக பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் சாரதி பயிற்றுவிப்பாளராக நடாத்தப்படும் கற்கைகளில் பங்குபற்ற வேண்டும், அதனை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்பு சாரதி பயிற்றுவிப்பாளராக செயற்படுவதற்கான நடைமுறைப் பரீட்சைக்கு முகம் கொடுக்க வேண்டும். குறித்த நடைமுறைப் பரீட்சையில் 40% இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்ற பரீட்சை தோற்றுநர்களுக்கு பயிற்றுவிப்பாளர்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். உரிய பரீட்சைக்கான கட்டணத்தை விண்ணப்பதாரியே செலுத்த வேண்டும்.

(2) பரீட்சையின் பெறுபேறுகள்.- எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% இனை விட குறையாமல் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகள் உள்ளடக்கப்பட்ட ஆவணமானது மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திடம் கையளிக்கப்படும். பரீட்சைக்கு வருகைத் தந்த அனைத்து விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகளும் தபால் மூலமாக அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் வலைத்தளமான *www.results.exams.gov.lk* என்ற வலைத்தள முகவரியின் ஊடாக தெரியப்படுத்தப்படும்.

6. விண்ணப்பிக்கும் முறை :

(அ) விண்ணப்பப்படிவமானது இந்த விளம்பரத்தில் காட்டப்பட்ட மாதிரிப் படிவம் போல காணப்பட வேண்டும். குறித்த காகிதத்தை இரு பக்கமும் பயன்படுத்தவும். 8.27"× 11.69" (A4) என்ற அளவிலான காகிதத்தில் விண்ணப்பமானது தயார் செய்யப்பட்டு விண்ணப்பதாரியினல் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தை தயார் செய்யும் போது தலைப்பாக பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட்ட வேண்டும். சிங்கள விண்ணப்பப் படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் பரீட்சையின் பெயர் தலைப்பாக குறிப்பிடப்பட வேண்டும். மேலும், மாதிரி விண்ணப்பப் படிவத்தினை போலவே 1 முதல் 07 வரை இலக்கமிடப்பட வேண்டும் என்பதுடன் முதலாவது பக்கத்தின் தொடர்ச்சி இரண்டாம் பக்கத்திற்கு செல்கிறது என்று முறையாக குறிப்பிட வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழியில் விண்ணப்பம் இருக்க வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவமானது 2022.03.15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கப் பெறும் வகையில் “பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்புக்கள் (நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு” என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “உதவி சாரதி பயிற்றுநராக சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான எழுத்து மூலமான பரீட்சை (2022)” எனத் தெளிவாக எழுதியிருக்க வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் எந்த விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) பரீட்சைக் கட்டணம்.- ரூபா 1,200 ஆகும். குறித்த கட்டணமானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பான 20-03-02-13 என்பதன் கீழ் அரசாங்க வருமானத்திற்கு வரவு வைத்து நாடு பூராகவும் காணப்படும் ஏதேனும் தபால் நிலையத்தில் /மாவட்ட /பிரதேச செயலக அலுவலகத்தில் பணமாக செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் கிடைக்கப்பெறும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் ஒட்ட வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்காக செலுத்திய பணம் எந்த காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பதாரி தன்னிடம் வைத்துக்கொள்வதன் மூலம் அது பின்னர் பயன்படலாம்.

(உ) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபரால், சமாதான நீதவானால், சத்தியங்களுக்கான ஆணையாளரால், சட்டத்தரணியால், பிரசித்த நொத்தாரிசால், முப்படைகளில் அதிகாரம் கொண்ட அலுவலர், பொலிஸ் சேவையின் அரசாங்க வர்த்தமானியின் படி பதவி வழங்கப்பட்ட அலுவலர் அல்லது நிரந்தர அரசாங்க பதவி கொண்ட கிராம அலுவலர் அல்லது நிறைவேற்று அலுவலர் ஆகியோரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

(ஊ) எந்த வகையிலேனும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபால் செய்யப்பட்ட போது விண்ணப்பப் படிவம் காணாமல் போனாலோ, தாமதமானாலோ, அது தொடர்பான புகார்கள் கவனத்திலெடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பப் படிவம் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரமாட்டாது.

(எ) அனுமதிப் பத்திரம் வழங்கும் போது விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்பட்டதன் பின்னர் உடனடியாக அது தொடர்பில் தெரிவிக்கும் அறிவித்தல் பத்திரிகைகளிலும் திணைக்களத்தின் வலைத்தளத்திலும் பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். அறிவித்தலில் சொல்லப்பட்ட பரீட்சை நடைபெறும் தினத்திற்கு குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்பு அனுமதி அட்டைக் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் பரீட்சையை நடாத்தும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அமைப்புக்கள் (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையில் அது தொடர்பில் விசாரிக்க வேண்டும். குறித்த விசாரணையின் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை பிழையில்லாது குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளிப் பிரதேசங்களில் வசிப்பவர் என்றால், குறித்த தகவலுடன் பெக்ஸ் மூலம் பரீட்சைக்கு அனுமதி அட்டையின் பிரதியை பெற்றுக்கொள்வதற்கு இலகுவாக பெக்ஸ் இலக்கம் ஒன்று குறிப்பிடப்பட்டு வேண்டுகோள் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைக்க வேண்டும். பெக்ஸ் இலக்கம் ஒன்றை அவ்வாறு குறிப்பிடுவதானது மிகவும் பயனுள்ளதாக அமையும். குறித்த விசாரணையின்போது பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கப்படும் எந்தவொரு தகவல் குறித்தும் சான்றுப்படுத்தக்கூடிய வகையில் விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தமைக்கான தபால் பற்றுச்சீட்டு என்பவற்றை தன்னுடன் வைத்திருப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

(அ) பரீட்சையின் பெயர் :----.
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் :----.
(இ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
(ஈ) முகவரி :----.
(உ) பெக்ஸ் இலக்கம் :----.
(ஊ) விண்ணப்பத்தைத் தபால் செய்த திகதி, பதிவு இலக்கம் மற்றும் அனுப்பி வைத்த தபால் அலுவலகம் :----.
(எ) கட்டணம் செலுத்திய இலக்கம் :----.
(ஏ) பரீட்சைக்கு தோற்றியிருக்கும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையினைப் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பதிகாரியிடம் முன் வைக்க வேண்டும். பரீட்சை அனுமதி பத்திரத்தை முன்வைப்பதற்கு இயலாமல் போகும் விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேலும், பரீட்சைகள் நடாத்துவதற்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

அவர்களினால் கொண்டு நடாத்தப்படும் விதிமுறைகளுக்குப் பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டவர்களாவர். குறித்த விதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

(ஒ) பரீட்சைக்கு தோற்றயிருக்கும் விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதானது அவர் குறித்த பதவி நிலைக்கு தகுதி பெற்று விட்டார் என்று கருதப்படக்கூடாது.

7. பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.- பரீட்சார்த்திகள் அவர்கள் தோற்றும் ஒவ்வொரு விடயம் சம்பந்தமாக பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படுத்தும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தனது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்துவதற்காக கீழ்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வழங்கப்படும். இந்த அறிவித்தல்களுக்கு இடையில் மொழிகளில் ஏதேனும் பொருத்தப்பாடுகள் இல்லாமல் இருந்தால் அல்லது முரண்பாடுகள் காணப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் படியே செயற்பட வேண்டும்.

09. இந்த பரீட்சை தொடர்பான அறிவித்தலின் ஏற்பாடுகளை கவனத்திலெடுக்காத விண்ணப்பங்கள் தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானதாகும்.

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம்.

மோட்டார் வாகனப் போக்கவரத்து ஆணையாளர் திணைக்களம்,
இல. 341, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5.
2022.01.12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்**

Department of Motor Traffic

உதவி சாரதி பயிற்றுநர்களைப் பதிவு செய்வதற்கான எழுத்துமூலப் பரீட்சை - 2022

Written Examination for Registration of Assistant Driving Instructors - 2022

* பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
(பொருத்தமான இலக்கத்தை பெட்டியினுள் எழுதவும்)
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4

1. (அ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ஆ) கடைசிப் பெயரை முதலில் எழுதி முதலெழுத்துக்களை பின்னால் எழுதவும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. (அ) விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(ஆ) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

(இ) சாரதிப் பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

4. பால் :
ஆண் - 0
பெண் - 1

| |
|---|

(பொருத்தமான இலக்கத்தை பெட்டியினுள் இடவும்)

5. தொலைபேசி இலக்கம் :-
கையடக்கத் தொலைபேசி :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

நிரந்தர தொலைபேசி :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

6. விண்ணப்பதாரியின் வயது மற்றும் பிறந்த திகதி :
(அ) வயது :

| | |
|---|---|

பிறந்த திகதி :
ஆண்டு :

| | | | |
|---|---|---|---|

மாதம் :

| | |
|---|---|

திகதி :

| | |
|---|---|

7. கல்வித் தகைமை :-----.

8. அனுபவம் :-----.
(சான்றுப்படுத்தப்பட்ட ஆவணங்களை இணைக்கவும்)

9. (அ) பரீட்சைக் கட்டணமான ரூபா 1,200.00 பணத்தினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும். பற்றுச்சீட்டின் பிரதியினை நீங்கள் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

| |
|---|

(அ) தான் அரச, பகுதியளவில் அரசாங்க மற்றும் அது போல வேறு ஏதேனும் நிறுவனங்களில் சாரதி பயிற்சி சேவையில் ஈடுபட்டமை தவிர அவ்வாறான நிறுவனங்களில் ஊழியராக சேவை புரியவில்லை என்பதை சத்தியக்கடதாசியின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். (ஓய்வு பெறுவதற்கு 6 மாத காலங்கள் மீதமிருக்கும் நபர்களும் விண்ணப்பிக்க முடியும். அவர்களின் பயிற்றுவிப்பவர்களுக்கான அனுமதிப் பத்திரம் ஓய்வுபெற்ற பின்னரே வழங்கப்படும்.)

மேலே சொல்லப்பட்ட என்னுடைய தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கு உட்பட்டு பிழையில்லாத விதத்தில் நான் வெளிப்படுத்துகிறேன். மேலும், பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தி னூடாக செயற்படுத்தப்படும் விதிமுறைகளுக்கு நான் கட்டுப்பட்டு நடப்பேன் எனவும் தெரிவிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

